REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.P.

## என்ன தாராளம்?

சென்னை, செப். 28—

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிவந்துள்ள 'அகதி'களுக்குப் புனர்வாழ்வளிக்குமுகத்தான், சென்னை சர்க்கார், அந்த அகதிகள் நடத்தும் வியாபாரத்திற்கு விற்பனை வரி எதுவும் தரத் தேவையில்லை என்று அறிவித்திருக்கின்றனராம்.

1955 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு இந்தச் சலுகை தரப்படுமாம்.

மலர் 3] சென்னை: புரட்டாசி 13உ வியாழன் (29—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 14உ வெள்ளி (30—9—55) [இதழ் 91

# ஆவடி மாநாட்டிற்கு ரூ. 5 இலட்சம்

# காங்கிரசின் முன்னுளைய தீர்மானங்கள்!

## இன்றைய உலகுடன் தொடர்பற்றவையாம்

### பண்டித நேரு கூற்று

புதுடில்லி, செப். 28—

"மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் விஷயத்தில், மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்தான் இறுதியானவையா? இதற்குப் பிறகு அகில இந்திய காங்கிரசின் முன்னுள் தீர்மானங்கள் எதுவும் முன்னுக்குக் கொண்டுவரப்படக் கூடாதா?"

என்று பண்டித நேருவைக் கேட்டபோது, அவர்,

"சிலர் முட்டாள்தனமானவற்றையும், இதரவற்றையும் பேசுவதை நான் எப்படித் தடுக்க முடியும்? காங்கிரஸ், தனது கொள்கை குறித்து சமீபத்தில் விளக்கமாகத் தெரிவித்துவிட்டது. 1920-ம் ஆண்டில் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களை, இப்போது பேசுவதற்கு எவருக்கும் தொடர்பு இருக்க முடியாது; உலகம் மாறிவிட்டது—எல்லாம் மாறிவிட்டன,"

என்று பதிலளித்திருக்கிறார்.

# சென்னை சர்க்கார் செலவிட்டனராம்!

## இந்தியாவுக்கு இராணுவ தகவல்கள்?

### உளவு பார்த்ததாக 8 பேர் மீது வழக்கு

கராச்சி, செப். 28—

பாகிஸ்தான் இராணுவம் பற்றிய முக்கிய தகவல்களைக் கராச்சியிலுள்ள இந்திய உயர்தர அதிகாரிகளுக்குத் தெரிவித்து உளவு பார்த்ததாக ஆறு பாகிஸ்தான் விமானப் படையினர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உளவு பார்த்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ள இவர்கள் கராச்சியில் சிறை வைக்கப்பட்டுள்ளனராம்

இந்தியாவில், பதிவான புகையிலை உற்பத்திச்சாலை எண்ணிக்கை 1954-ம் ஆண்டின் பிற்பகுதியில் மொத்தம் 1,686 ஆக இருந்தன; அவற்றில் தினமும் சராசரி 1,01,046 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர்.

## இதர கட்சி மாநாடுகளுக்கு பெருங்கூட்டம் கூடுவதில்லையாம்!

### ஏ. கோவிந்தசாமியின் கேள்விக்கு மந்திரி பதில்

சென்னை, செப். 28—

"சென்னை சர்க்கார், ஆவடியில் நடைபெற்ற அகில இந்தியக்காங்கிரஸ் மாநாட்டிற்காக செலவிட்ட தொகை எவ்வளவு?" என்று தோழர் ஏ. கோவிந்தசாமி, சட்டசபையில் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மந்திரி சுப்பிரமணியம் "ரூ 4,80,320—5—6 சர்க்கார் செலவிட்டனர்" என்று பதிலளித்திருக்கிறார்.

போலீஸ், ஒலிபரப்பு, பொது மராமத்து, சுகாதாரம், கல்வி—என்று, இலாகா வாரியாக சர்க்கார் செலவிட்ட தொகை விபரங்களையும் அவர் சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

தோழர் எம். பழனியாண்டி: "இதர கட்சியினர் நடத்தும் மாநாடுகளுக்கும் சர்க்கார் இப்படிச் செலவிடுமா?"

அமைச்சர் :—"இதர கட்சியினர் மாநாட்டிற்கு ஆவடி காங்கிரஸ் மாநாட்டிற்குக் கூடியதுபோல, மக்கள் திரளாகக் கூடுவதில்லை;

"எந்தக் கட்சி மாநாட்டிற்காவது, மக்கள் பெருந்திரளாகக் கூடுவார்களேயானால், 'வசதிகள் தேவை' என்று கோரப்படுமானால், சர்க்கார் அதுபற்றி யோசிக்கும்."

## எவ்வளவு உரக்கக் குரல் கொடுக்கலாம்?

### மக்கள் சபையில் 'ருசிகர விவாதம்'

புதுடில்லி, செப். 28—

உறுப்பினர்கள் எவ்வளவு உச்சக் குரலில் பேசலாம் என்பது குறித்து இன்று, மக்கள் சபையில் ஒரு 'ருசிகர விவாதம்' நடைபெற்றிருக்கிறது.

தோழர் எச். வி. காமத், இரு முறை, வாய்மொழி மூலம் தனது வாக்கினை அளிக்கும் வாய்ப்புப் பெற்றார்; அந்த இரு முறைகளிலும் அவர், தனது குரலை உச்சத்திற்கு உயர்த்திக் கணீரென ஒலிக்கச் செய்திருக்கிறார்; இரண்டாம் முறை அவர் அப்படி உரக்கக் கூவியபோது, தலைமை வகித்த உதவி சபைத் தலைவர், 'எனது காதுக்கு எட்டும்படியாக உறுப்பினர்களின் குரல் சத்தமாக இருக்க வேண்டியதுதான்; ஆனால், அதற்காக, குரலை உச்சத்திற்கு உயர்த்தி உரக்கக் கூவத் தேவை இல்லை; மேலும், முடிவு எடுக்க, குரலின் தன்மை அல்ல தேவைப்படுவது—'எத்தனை பேர் குரல் கொடுக்கின்றனர்' என்பதுதான் கணக்கில் வரும்; அன்றியும் தலைவர் ஒன்றும் செவிடு அல்ல,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உடனே தோழர் காமத் எழுந்து 'சட்டத்தில், குரல் எந்த அளவு இருக்கவேண்டுமென்று விதிக்கப் படவில்லை; இயற்கையாக எனக்குக் கிடைத்தது எனது குரல்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உடனே தலைவர், 'சபையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதும், சபையில் கௌரவத்தைக் காப்பாற்றவும் வேண்டியது எனது பொறுப்பாகும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அடுத்த முறை வாக்களித்தபோது, தோழர் காமத், சாதாரணமாகக் குரல் கொடுத்திருக்கிறார்; உடனே சபைத் தலைவர், உறுப்பினரின் இனிமையான போக்கினைப் பாராட்டியிருக்கிறார்; சபையில் எல்லோரும் சிரித்தனராம்!

# 'சர்க்கார் அரசியல் சட்டத்தை மதித்து நடக்கின்றனரா?'

## 'அஞ்சல் அட்டைகளில் இந்தி மொழி ஏன்?'

### சென்னை மேல் சட்டசபையில் டாக்டர் லட்சுமணசாமி போர்க்கோலம்

சென்னை, செப். 28—

இந்தியப் பேரரசு நியமித்துள்ள அலுவல் மொழிக் குழு (இந்தி மொழிக் குழு) தயாரித்துள்ள கேள்விப் பட்டியல் குறித்து, சென்னை மேல்(சட்ட)சபை இன்று விவாதித்திருக்கிறது.

இந்தி மொழி இந்தியாவின் அலுவல் மொழியாவதில் தென்னாட்டவருக்குள்ள கேடுகள் பலவும் பற்றி, எதிர்க் கட்சியினர் எடுத்துரைத்திருக்கின்றனர்.

சபையின் நடவடிக்கைகளை மொழிக் குழுவிற்கு, தங்களது பதில்களுடன் அனுப்புவதாகவும், தாங்கள் இன்னும் பதில்களை இறுதியாகத் தயாரிக்கவில்லை என்றும், மந்திரி பக்தவத்சலம் சபையில் தெரிவித்திருக்கிறார்.

தோழர் ரஜாகான் பத்து அம்சங்கள் அடங்கிய திருத்தப் பிரரேபணை ஒன்று கொண்டுவந்தார். அதனை வழிமொழிந்து, தோழர் ஜஜபதி (நாயகர்) பேசியிருக்கிறார். டாக்டர் ஏ. இலட்சுமணசாமி உள்பட பதினொரு பேர்கள் விவாதத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

தோழர் ராஜாகான்பேசுகையில் சொன்னார் :—

"உண்மையான இந்தி மொழி எது என்பதை இன்னும் நாம் கண்டுபிடிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்; பிரதம மந்திரி பேசுகிற இந்தி மொழியை நாம் ஏற்றுக்கொள்ள முடியும்; ஆனால், வட இந்தியர்களுக்கே புரிந்துகொள்ள முடியாத மொழி ஒன்றினைப் புகுத்த முயற்சிக்கப்படுகிறது. புதியதொரு இந்தி மொழியே உருவாக்கப்படுவதாகத் தெரிகிறது."

தோழர் ஏ. ஜஜபதி (நாயகர்) பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"இந்த மாநிலத்தின் நடவடிக்கைகள் முழுவதும் வட்டார மொழியிலேயே (தமிழ் மொழியிலேயே) நடைபெற்றாக வேண்டும்; வாக்காளர்களுக்காகத்தான் நாம் இங்கு வீற்றிருக்கிறோம்; அந்த வாக்காளரின் குரல் இங்கு கேட்கப்பட வேண்டும்; வாக்காளர் பேசும் மொழிதான் சட்டசபை மொழியாகவும் இருக்க வேண்டும்;

"இந்திய யூனியன் அலுவல் மொழியாக தேவநாகரி லிபியில் உள்ள இந்தி மொழி இருக்கும்; அப்படியானல், அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள இதர மொழிகள் எல்லாம், இந்தியைப் போலவே தேசிய மொழிகள் அல்லவா? சுமார் ஓராண்டிற்கு முன் நான், இங்கு, 'தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும்' எனக் கோரினேன்; அம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவருவதற்கு, சர்க்கார் ஏன் தாமதமாகியது?

"பொது மொழி என்கிற பிரச்சினையே இல்லை; இந்தி, இந்திய சர்க்காரின் அலுவல் மொழி—அவ்வளவேதான்; ஒரு மொழி, ஒரு மாநிலத்தின் மொழியாகும்போது, அது, அதே நேரத்தில் மக்கள் சபையிலும் பேசப்படும் ஒரு மொழியாகவும் ஆகிவிடுகிறது; ஒரு சட்டசபைக்குப் போதுமான மொழியாக ஒரு மொழி ஆக்கப்படும்போது, மக்கள் சபைக்கும் அது போதுமான மொழிதான்;

"பொது மொழி வேண்டுமென்பது, ஒரு சரித்திரக் குழப்பமாகும்; வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவை அடிமை கொண்டபோது, தங்கள் மொழியை இங்கு திணித்தனர்—பொது மொழி என்ற பெயரில்—என்பதே, இந்த 'அராஜகத்'திற்கு—குழப்பத்திற்குப் போதுமான சான்றாகும்; மொழிச் சிக்கல் மிக முக்கியமான ஒன்றாகும்;

"ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்று நினைத்தால், ஆங்

(4-ம் பக்கம் பார்க்க.)

## அவாமி லீக் தலைவருக்கு அவசர அழைப்பு

### அப்துல் கபார்கான் திட்டம்

கராச்சி, செப். 28—

தற்சமயம் எல்லைப்புற மாகாணத்தில் இருக்கும் அவாமி லீக் தலைவர் மங்கி ஷெரீபுக்கு, ஒருமுப்புத் திட்டத்தை எதிர்ப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, உடனடியாகக் கராச்சிக்கு வருமாறு கான் அப்துல் கபார்கான் அவசர அழைப்பு அனுப்பியுள்ளாராம்!

## பொதுமக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமாம்!

இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 3,000 மைல் புதிய 'லைன்'கள் போடவும், 2,500 மைல் வரை இரட்டை 'லைன்'கள் போடவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

மக்கள் சபையில், இரயில்வே போக்குவரத்து பற்றி நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில், இரயில்வே அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துவிட்டுமேலும் சொன்னார் :—

"எஞ்சின்கள் வாங்குவதற்கு ரூ. 450 கோடிக்கு மேல் செலவிடப்படும்; ஏற்கனவே உள்ள 'லைன்'களைப் புதுப்பிக்க ரூ. 800 கோடியும், புதிய 'லைன்'கள் போட ரூ. 200 கோடியும் செலவாகும்; திட்டம் நிறைவேற சிறிது காலம் (2 அல்லது 3 ஆண்டுகள்) பிடிக்கும் அதுவரை சிரமங்களைப் பொது மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்."

நம் நாடு

சென்னை 29—9—'55 வியாழன்

# என்ன வித்தியாசம்?

★

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் அசாம் மாநிலத்தை ஒட்டிய நாகமலைப் பகுதிகளில் பல இலட்சம் நாகர்கள் வாழ்கின்றனர்.

கடந்த 1947-ல், இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் வெளியேறிய காலத்திலிருந்து, தாங்கள் வாழும் நாக நாடு, இந்திய யூனியன் என்ற 'ஏக இந்திய' அரசியல் அமைப்பிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக வாழ வேண்டும் என்று அவர்கள் கோரி வருகின்றனர்.

நாகர்களின் இந்த விடுதலைக் கோரிக்கையை அன்றுமுதல் இந்தியப் பேரரசு அலட்சியம் செய்து வருகிறது.

நாகர்களோ, தங்களின் விடுதலைக் கோரிக்கைக்கான அடிப்படைக்குரிய நியாயமான காரணங்களைக் காட்டி, "நாங்கள் 'இந்திய யூனியன்' என்ற அமைப்பில் வாழ விரும்பவில்லை—தனித்து, சுதந்திரமாக வாழ விரும்புகிறோம்," என்பதைத் தெளிவாகக் கூறிவருகின்றனர்.

இந்தச் சுதந்திர இலட்சிய ஈடேற்றத்திற்காக அவர்கள், 'நாகர் தேசியக் கவுன்சில்' என்ற ஒரு இயக்கமும் கண்டு, இடைவிடாது, விடுதலைகோரிப் போர் முழக்கமிட்டு வருகின்றனர்.

இந்தியப் பேரரசு கூறுகிறபடி, நாகர்களில் சில தீவிரவாதிகள், தங்களின் விடுதலைத் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக ஆயுதங்களின் துணையைக் கூட நாடுகின்றனர்.

விடுதலைக் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுக்கும் இந்தியப் பேரரசு, நாகர் தலைவர்களுடன் பேரம் பேசமட்டும் தயாராக இருக்கிறது.

"உங்களுடைய மக்களின் வாழ்வு முன்னேற திட்டங்கள் தீட்டுகிறோம்; பல இலட்சம் பணம் செலவிடுகிறோம்; பள்ளிகளும், மருத்துவ மனைகளும் திறக்கிறோம்; மலைவாழ் மக்களான உங்களுக்கு நாகரீகம் கற்றுத் தருகிறோம்; என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறோம்; ஆனால், 'இந்தியாவை விட்டு தனித்துப் போக வேண்டும்,' என்று மட்டும் கேட்காதீர்கள்; நீங்கள் கொண்டுள்ள விடுதலை விருப்பத்தை மறந்து விடுங்கள்; அந்தக்கோரிக்கை பற்றி நாங்கள் உங்களுடன் பேசவே தயாராக இல்லை," என்று, நாகர் தலைவர்களுக்குச் செய்தி அனுப்புகின்றனர்.

'இவற்றை எல்லாம்விட, எங்களுக்கு, விடுதலையே பெரிது,' என்று நாகர்கள் கருதுகின்றனர்; கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர்.

அந்தக் கிளர்ச்சியை ஒடுக்க இந்திய சர்க்கார், தங்களின் இராணுவத்தினரை ஏவியுள்ளனர்.

சமீபகாலமாக, நாகர்களில் தீவிரவாதிகளான பலர், திரைமறைவிலிருந்து தாக்குதல் நடத்துவதாகவும், கொள்ளையடிப்பதாகவும் சாக்குக் கூறிக்கொண்டு, இந்திய சர்க்கார், அங்கு மனித வேட்டையாடி வருகிறது; அதுபற்றி அவ்வப்போது துண்டு, துண்டுகளாகச் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

ஒரு பகுதி மக்கள், தாங்கள் நியாயம் என்று கருதி வெளியிடுகிற கோரிக்கை பற்றி கருத்தறிவிக்கவே மறுத்துவிட்டு, அவர்கள் அந்தக் கோரிக்கை ஈடேற்றத்திற்காக நடவடிக்கை மேற்கொண்டால், 'அது பலாத்காரமானது' என்று கூறி, இராணுவத்தை ஏவி, நடவடிக்கையில் ஈடுபடுவோரைக் கொன்று குவிப்பது, எந்த நியாயத்தின்பாற்பட்டதோ நமக்குத் தெரியவில்லை.

மலேயாவிலும், கெனியாவிலும் அங்குள்ள விடுதலை விரும்பிகள் மீது வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்ட— மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளுக்கு என்ன நியாயமுண்டோ, அதே நியாயம்தான், நாகர்கள் மீது இந்தியப் பேரரசு தொடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும் கூறப்பட முடியும்.

'உங்களுக்கு ஆளத் தெரியாது; நீங்கள் நாகரீகமற்றவர்கள்' என்று வெள்ளையர் கூறுவதைப்போலத்தான், இந்தியப் பேரரசும் நாகர்களுக்குக் கூறுகிறது!

'உங்களின் நலனுக்காகத்தான் நாங்கள் உங்களை ஆள்கிறோம்,' என்று வெள்ளையர் திமிரோடு பேசுவதைத்தான், இந்தியப் பேரரசும் நாகர்களிடம் பேசுகிறது.

'உங்களுக்கு என் விடுதலை?' என்ற வெள்ளையர் கேள்வியைத்தான், இந்தியப் பேரரசும் கேட்கிறது.

'உங்களுக்காகப் பள்ளிகள், மருத்துவமனைகள், இன்னோன்ன பிறவசதிகள் எல்லாம் செய்து தருகிறோம்; ஆனால், எங்கள் ஆதிக்கத்தை மட்டும் விட்டுக்கொடுக்கமாட்டோம்!' என்று ஏகாதிபத்தியவாதிகளான வெள்ளையர் பேசுகின்றனர்; இந்தியப் பேரரசும், அடிதவறாமல் அந்த வழியே நடக்கிறது!

விடுதலைக் கோரிக்கைக்கு ஆதிபத்திய வாதிகள் நியாயமாக இணங்கி வர மறுக்கும்போது, அடிமைப்பட்டோர் போராட்டம் நடத்தினால், அதற்குப் 'பலாத்காரம்' என்ற நிறத்தைப் பூசி, கோரிக்கையையே ஒழித்துவிட முற்படுவது, ஏகாதிபத்தியவாதிகளின் தந்திரங்களுள் ஒன்றாகும்: அந்தத் தந்திரத்தை முழுத் திறமையோடு, நாகர்களிடம் கையாளுகிறது இந்தியப் பேரரசு!

இந்த வடநாட்டு ஆதிக்க வெறியர்களுக்கும், ஏனைய உலக ஏகாதிபத்தியவாதிகளுக்கும் என்ன வித்தியாசம் காண்கின்றனர் நாட்டவர்? ஏதுமில்லையே!

# 'நாக நாடு' கோரி கிளர்ச்சி

## இந்திய துருப்புகளால் 40 நாகர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

### பலாத்காரத்தில் ஈடுபட்டதாகக் காரண விளக்கம்

புதுடில்லி, செப். 28—

"நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டிருக்கிற மனித வேட்டை போதாது என்று, இப்போது அசாமில், ஆயுதந்தரித்த போலீஸ் படையொன்று புதியதாகத் திரட்டப்பட்டு வருகிறது," என்று செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த கிழமையில் இந்திய இராணுவத்தினர், நாகர்கள் தலைமறைவாயிருக்கும் குகைகளுக்கும், புதர்களுக்கும் சென்று பெரியதொரு வேட்டையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நவீன ஆயுதங்களுடன் பலாத்காரத்திலும், கொள்ளையடிப்பதிலும் நாகர்கள் ஈடுபடுகின்றனர் என்று கூறிக்கொண்டு, இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக சுமார் 40 நாகர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயம்பட்டனர் என்றும் சர்க்கார் தெரிவிக்கின்றனர்.

வடகிழக்கு எல்லை நிறுவனத்தின் துயென் சாங் பகுதியில் சுமார் 2,000 நாகர்கள் ஆயுதங்களுடன் தலைமறைவாயிருப்பதாயும், அவர்கள் அனைவரையும் பூண்டோடு அழித்துவிட இந்திய இராணுவத்தினர் திட்டமிட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

நாகர்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டன என்றும், அவற்றில் பல, இந்தியாவில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், அவைகள், மணிப்பூர், நாகமலை ஆகிய இடங்களிலிருந்து கடத்தப்பட்டிருக்கக்கூடும் என்றும் சர்க்கார் கருதுகின்றனராம்.

"துயென் சாங் பகுதியில் நாகர்கள் மேற்கொண்டுள்ள 'பலாத்கார' நடவடிக்கைகளை, 'நாகர் தேசியக் கவுன்சில்' இரகசியமாக ஆதரிக்கிறது என்பதற்கு எங்களிடம் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன" என்றும் சர்க்கார் தெரிவித்துள்ளது.

நாகர் தேசியக் கவுன்சில் தலைவரான எ. கே. பிசோ, அண்மையில், 'நாகர்கள் பலாத்காரத்தில் ஈடுபடக் கூடாது' என்று அறிக்கை வெளியிட்டிருந்தார்; அந்த அறிக்கையை சர்க்கார் சந்தேகிக்கின்றனராம்!

"நாகர் தேசியக் கவுன்சில், வெளியில் பலாத்காரத்தைக் கண்டிப்பதும், மறைமுகமாகப் பலாத்காரத்தைத் தூண்டுவதுமான இரட்டைப் போக்கில் தொடர்ந்து செயல்படுவார்களானால், நாகர் தேசியக் கவுன்சிலையே சட்ட விரோதமானதென்று அறிவிக்க சர்க்கார் தயங்காது," என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகர் தேசியக் கவுன்சில், கடந்த 1947-ம் ஆண்டிலிருந்து, "நாகர்களுக்கென சுதந்திரமான 'நாக நாடு' வேண்டும்," என்று விடுதலை முரசு கொட்டி வருகிறது.

அந்த விடுதலையைப்பெற, நாகர்கள் இதுவரையில் எண்ணற்றஉயிர்களைப் பலிதந்துவிட்டனர். இந்தியப் பேரரசோ, விடுதலைக் கோரிக்கைக்கு வேறு 'முகம்' தந்து, கிளர்ச்சியை, இராணுவத்தையும் அதனிடமுள்ள துப்பாக்கிக் குண்டுகளையும் கொண்டு அடக்கிவிடத் தீவிரமாக முயற்சித்து வருகிறது.

# அல்ஜீரியா விடுதலை கிளர்ச்சி

### பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் விபரீதப் போக்கு!

பாரிஸ், செப். 27—

"அல்ஜீரியாவை, தொடர்ந்து எங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவே எண்ணுகிறோம்; எங்கள் ஆதிக்கத்திற்கு எதிராகத் தாக்குதல் துவங்குமானால், அந்தத் தாக்குதலை எதிர்த்து முறியடிக்க எங்கள் ஆற்றல் முழுவதையும் செலவிட முடிவு செய்திருக்கிறோம்," என்று, பிரெஞ்சுப் பிரதமர் எம். எட்கார் பாவ்ரே தெரிவித்திருக்கிறார்.

வானொலியில் நாட்டவரிடம் பேசுகையில் அவர், "எவர் அச்சுறுத்தினாலும், அல்ஜீரியாவைப் பாதுகாப்போம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அல்ஜீரியாவில் இப்போது தேசியவாதிகள் விடுதலை கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள், அல்ஜீரியாவிலிருந்து பிரெஞ்சு ஆதிக்கம் அகற்றப்பட்டு, தாங்கள் சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர். தற்காலிகக் கோரிக்கையாக, 'சுயாட்சி வழங்கவேண்டும்' என்றும், பாரிஸ் சர்க்காரிடமிருந்து பெரும் அளவு சுதந்திர அம்சங்கள் கொண்ட சர்க்கார் அமையவேண்டும் என்றும் கோரி வருகின்றனர்.

ஆனால், பிரெஞ்சு ஏகாதிபத்தியமோ, பாவ்ரே கூறுகிறபடி, 'வட ஆப்பிரிக்கா முழுவதையும் பிரான்சுடன் இணைத்துவிட எண்ணிக் கொண்டிருக்கிறோம்—குறிப்பாக, அல்ஜீரியாவைப் பிரான்சுடன் சீக்கிரமே இணைத்துவிடத் திட்டமிட்டிருக்கிறோம்" என்று, நேர் எதிரிடையான போக்கில் பேசிக்கொண்டிருக்கிறது.

# பிரிவினைக்குப் பின்!

### இந்தியா—பாகிஸ்தான் அகதிகள் எண்ணிக்கை

"இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களைக் காட்டிலும், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வந்த இந்துக்களின் எண்ணிக்கை, 17 இலட்சம் அதிகம்,"

என்று, கேள்வி ஒன்றுக்குப் பண்டித நேரு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலிலிருந்து தெரியவருகிறது.

"இந்த ஆண்டு ஜூலை 31-ந் தேதிவரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியா திரும்பிய இந்துக்களின் எண்ணிக்கை 35 இலட்சம்—மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் 47 இலட்சம்," என்றும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களில் 10 இலட்சம் பேர் மீண்டும் இந்தியா வந்துவிட்டதாகவும், இந்தியாவிலிருந்து இந்தக் காலத்தில் பாகிஸ்தான் சென்ற முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கை 61 இலட்சம் என்றும் பண்டிதரின் பதில் தெரிவிக்கிறது.

# மாறுதலின்றி ஏற்க வேண்டுமாம்!

"பெரிய மாறுதல்கள் ஏதுமின்றி, மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை மக்கள் சபையும், இந்திய சர்க்காரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்; பெரிய மாறுதல்கள் ஏதேனும் செய்யப்படுமானால், ஓயாத பிரச்சினைகள் கிளம்பி, அனாவசியமான மனக் கசப்பு ஏற்பட்டுவிடும்," என்று, ஆச்சாரியா வினோபா பாவே கருத்தறிவித்துள்ளார்.

# 'நாட்டையே சிறைச்சாலையாக்கினும் போராட்டத்தைக் கைவிடோம்!'

## மகாரியஸ் பாதிரியார் அறைகூவல்

நிகோசியா, செப். 28—

'கிரீஸ் நாட்டுடன், சைப்ரஸ் இணைய வேண்டும்,' என்று கோரும் 'சைப்ரியத் கிரீக் இனசிஸ்' என்ற இயக்கத்தின் தலைவரான 'ஆர்ச் பிஷப்' மகாரியஸ், சைப்ரஸ் முழுவதும் சீக்கிரமே தான் துவங்க இருக்கும் போராட்டம் தீவிரமாக நடைபெறும் என்றும், போராட்டத்தினால் சர்க்கார் இயங்குவது கடினமாவதை உணருவர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

"சைப்ரஸ் சிக்கலை விவாதிக்க ஐ. நா சபை மறுத்துவிட்டது; மேலும், லண்டன், பிரிட்டன், கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றுவிட்டன; எனவே, போராடுவதைத் தவிர வேறு வழியில்லை," என்று, மகாரியஸ் தெரிவித்திருக்கிறார்.

"சைப்ரஸ் மக்கள் சுலபத்தில் ஏமாற்றப்பட முடியாதவர்கள்; சைப்ரஸ் தீவே ஒரு பெரும் சிறைச்சாலை ஆக்கப்பட்டாலும், தங்கள் போராட்டத்தை சுலபத்தில் கைவிடமாட்டார்கள் என்பதை பிரிட்டன் சீக்கிரமே உணரத்தான் போகிறது,"

என்றும், மகாரியஸ் அறைகூவியிருக்கிறார்.

மகாரியஸ் வருகையை முன்னிட்டு, இங்கிருந்து 25 மைல் தொலைவில் உள்ள கலோப்சிதா எனும் கிராமத்தின் வீதிகளில் எல்லாம், பிரிட்டிஷாருக்கு எதிரான வர்ச்சகங்கள் பொறித்த வரவேற்பு வளைவுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தனவாம்

பிரிட்டிஷ் இராணுவத்தினர், அவற்றை எல்லாம் தங்கள் ஆயுத பலத்தால் அப்புறப்படுத்தினராம்; ஆனாலும், கிராம மக்கள், சீக்கிரமே அவற்றைத் திரும்பவும் எழுப்பினர் என்று தெரிகிறது.

# பாய்ந்தவுடன் விரிந்து

### செயலற்றதாக்குகிறது!

'டம் டம் குண்டு'களின் விளைவு

ஆக. 15-ந் தேதியன்று, கோவா விடுதலையில் ஈடுபட்ட தொண்டர்கள் மீது 'டம் டம் குண்டு'களும் பிரயோகிக்கப்பட்டது என்று கூறப்பட்டதல்லவா?

இக்குண்டுக்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம், இந்தியாவிலுள்ள டம் டம் மாவட்ட குண்டுகள் உற்பத்திச்சாலையில் அது செய்யப்பட்டதுதானாம்!

இக்குண்டு ஒருவர் மீது பாய்ந்தவுடன், விரிந்து, அவருக்கு பெரும் அளவில் காயத்தை உண்டாக்கி அவரைச் செயலற்றவராக்கிவிடுகிறதாம்.

1904—1905-ம் ஆண்டில் நடைபெற்ற ரஷ்ய—ஜப்பான் போரில் இக்குண்டுகள் உபயோகிக்கப்பட்டதாகப் பல தகராறுகள் எழுந்தன; இதன் விளைவாக இக்குண்டுகளைப் பிரயோகிப்பதைத் தடை செய்ய வேண்டுமென எல்லா நாடுகளாலும் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது.

# தொழிலாளருக்கான இன்ஷ்யூரன்ஸ்

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், தற்போது, சுமார் 4,000 தொழிற்சாலைகளுக்கு பரவலாக்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தின்கீழ் மொத்தம் 9,23,000 தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

# சுட்டு வீழ்த்தப்பட்ட கோவா 'சத்தியாக்கிரகி'கள்

## நேருவின் அறிவிப்புக்கு கோவா வானொலி பதில்

பெல்காம், செப். 27—
எந்த ஒரு 'சர்வதேச'ச் சட்டமும் போர்ச்சுகீசியரை நிர்ப்பந்திக்கவில்லை என்ற போதிலும், கோவா எல்லையில், தாங்கள் சுட்டுக் கொன்ற ஏழு 'சத்தியாக்கிரகி'களின் சடலங்களை தாங்களாகவே எரித்துவிட்டதாக போர்ச்சுகீசிய கோவா வானொலி அறிவித்துள்ளது.

அந்த வானொலி, பண்டித நேருவின் அறிவிப்பு ஒன்றுக்குப் பதிலளிப்பதாகக் கூறிற்று.

பண்டித நேரு, கடந்த திங்கள் அன்று மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சுட்டுக் கொல்லப்பட்ட 'சத்தியாக்கிரகி'களின் சடலங்களைத் தந்துவிடுமாறு இந்திய சர்க்கார், கடந்த ஆகஸ்டு 15-ந் தேதி அல்லது 16-ந் தேதி காலையில் கேட்டதாகக் கூறியிருந்தார்; போர்ச்சுகீசியரோ, தாங்கள் ஏற்கனவே அந்தச் சடலங்களை எரித்துவிட்டதாகப் பதில் தந்தனராம்; 'இந்தியா, சடலங்களைக் கேட்ட பின்னர்தான் போர்ச்சுகீசியர் அவ்வாறு செய்திருக்கக்கூடும் என்பதும் சாத்தியமானதே' என்றும் பண்டித நேரு கூறியிருந்தார்.

பண்டித நேருவின் அறிவிப்பில் புதைந்துள்ள சூசகத்திற்குப் பதில் தெரிவிக்க விரும்பாத கோவா வானொலி, "நாங்கள் சடலங்களை எரித்தோம்; இந்தியத் தூதவர் கோவாவை விட்டு வெளியேறு முன் அவரிடம் சடலங்கள் எரிக்கப்பட்ட சாம்பலைத் தந்தோம்," என்று அறிவித்திருக்கிறது.

### பல ஆண்டுகள் உழைக்கும் நவீன ரகத் துணி!

நவீன ரகத்தைச் சேர்ந்த துணி ஒன்றை உற்பத்தி செய்வதற்கு இந்தியாவிலுள்ள ஒரு ஆலைக்கும், இரு கனடியக் கம்பெனிகளுக்கும் 'லைசென்ஸ்' வழங்கப்பட்டிருக்கிறதாம்.

மற்றத் துணிகளைவிட, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இந்த நவீன ரகத் துணி, பல ஆண்டுகளுக்கு உழைக்கக் கூடுமெனக் கருதப்படுகிறதாம்.

### புதிய தபால் தலைகள்

பிரபல ரஷ்ய பௌதிக மேதையான அலெக்சாண்டர் போபாவினால் கம்பியில்லாத் தந்தி கண்டுபிடிக்கப்பட்ட 60-வது ஆண்டு விழாவினை ஒட்டி, இரண்டு புதிய தபால் தலைகள் வெளியிடப்பட்டிருப்பதாயும், அவற்றில் போபாவின் உருவப்படம் இடம் பெற்றிருக்கும் என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

### மதுபானம் அருந்துவோர் மரண எண்ணிக்கை!

மதுபானம் குடிப்பதினால், 'மரணத்தின் பிடி'யில் சிக்கும் பிரெஞ்சுக்காரர்களின் எண்ணிக்கை, முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது அதிகரித்துள்ளதாம்!

மிதமிஞ்சிய மதபோதையின் காரணமாகச் சென்ற ஆண்டில் 4,106 பேர் மாண்டனர்; 1953ல், இந்தத் தொகை 3,905-தானாம்!

### ஆதாரம் தேடுவதற்கு 'அதிசயக் கூத்து!'

ஜோகனஸ்பர்க், செப். 27—
இராஜத்துரோகக் குற்றத்துக்கு ஆதாரம் தேடுவதற்காக, தென்னாப்பிரிக்காவிலுள்ள பல நிறுவனங்களை இரகசியப் போலீசார் சோதனையிட்டனராம்! டிரான்ஸ்வால் இந்தியக் காங்கிரசுக் காரியாலயமும், போர்ட்ஸ்பர்க்கிலுள்ள மத்திய இந்திய உயர்நிலைப் பள்ளியும் இச்சோதனைக்கு இலக்காயிற்று!

## புகலூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்

### தி. மு. க. மாநில மாநாட்டிற்கு நிதி தருவர்?

புகலூர், செப். 26—
புகலூர் சர்க்கரை ஆலையில் வேலை செய்வோரில், தி. மு. கழகப் பற்றுடைய சிப்பந்திகள், தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழக மாநில மாநாட்டிற்கு ரூ. 200 நிதி அளிப்பார்கள் எனத் தெரிய வருகிறது.

நிதி வசூலில், இலட்சிய எல்லையாக ரூ 200- எனத் தீர்மானித்திருந்தாலும், மேலும் அதிகமான தொகை வசூலாகக் கூடுமென நிதி வசூல் குழுவினர் கருதுகின்றனர். (ந. நி)

இந்திய சர்க்கார், அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இதுவரை மொத்தம் ஐந்து ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்பள்ளிக்கூடங்களுக்கு நடப்பு ஆண்டில் மொத்தம் சுமார் ரூ 13,500 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## ஜப்பான் மக்களின் உயர் பண்பு!

பரோடா, செப். 26—
ஜப்பானிய மக்கள் தங்கள் நாட்டின் கௌரவத்தைக் காப்பதில் மிகுந்த அக்கரை கொண்டவர்கள் என்றும், உயரிய நற்பண்பு கொண்டவர்கள் என்றும், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல மதத் தலைவரான துக்கோட் மகராஜ் என்பார் தெரிவித்திருக்கிறார்.

டோக்கியோவில், கடந்த திங்களில் நடைபெற்ற மத விசுவாசிகள் மாநாடு ஒன்றினை, இவர் துவக்கி வைத்தார்.

"ஜப்பானிய மக்களின் பண்பை நான் உணர முடிந்தது," என்று அவர் அப்போது தெரிவித்திருக்கிறார்.

அந்த மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதி ஒருவர், தான் தங்கியிருந்த விடுதியில், ஜப்பான் நாணயமாகச் சுமார் ரூ. 2,000 வைத்துவிட்டு மூன்று நாள் சுற்றுப் பயணத்திற்கு வெளியே சென்றுவிட்டாராம்.

அந்த விடுதியில் வேலைக்காரியாகப் பணிபுரிந்த அம்மையார், அந்தப் பணத்தை எடுத்துப் பத்திரமாக வைத்திருந்து, உல்லாசப் பிரயாணம் போன பிரதிநிதி திரும்பியதும், அவரிடம் ஒப்படைத்தாராம்.

அதற்காக அவருக்கு சன்மானம் தரப்பட்டபோது, அந்த அம்மையார் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரிகிறது

"ஏன் மறுக்கவேண்டும்? நீங்கள் நினைத்திருந்தால், மொத்தப் பணத்தையும் எவரும் அறியாமல் எடுத்துக்கொண்டிருக்கலாமே?"—என்று கேட்கப்பட்டபோது அந்த அம்மையார், "நான், சம்மதத்துடனோ, சம்மதமின்றியோ இந்தத் தொகையிலிருந்து ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டால் எங்கள் நாட்டின் பெருமை என்றென்றைக்கும் அழிந்துபட்டதாகிவிடும்; நாட்டுப் பெருமையோடு ஒப்பிடும்போது, பணம் எவ்வளவு கேவலமானது? மேலும், எங்கள் ஒழுக்க உணர்வைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புத்தான் எத்தனை பெரியது?" என்று பதில் தந்தாராம்!

மகராஜ் மேலும் சொன்னார்:
"ஜப்பானில் களவு போவதும், வியாபாரத்தில் திருட்டுத்தனம் நடப்பதும் மிகக் குறைவு"—என்று!

# குடல் நோய்களால் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் பலியாகின்றனர்?

## மக்களின் அலட்சியப் போக்கே காரணமாம்!

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் அமுலிலுள்ள பிரதேசங்களில் போதுமான சுகாதார வசதிகள் இருக்கும்படி செய்வதற்காக சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாக நிறுவனம், ஏற்கனவே 375 மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

கிராமாந்திரங்களில் சுமார் 30 இலட்சம் பேர் ஆண்டுதோறும் காலரா, டைபாய்ட், வயிற்றளைச்சல் போன்ற குடல் — ஜீரணக் குழல் வியாதிகளால் மரணமடைகிறார்கள்.

தூசியும், ஈயும் உணவுப்பொருள்கள் மீது படிவதால் தொத்து ஏற்படுவதும், மக்களின் அலட்சிய மனப்பான்மையால் சுகாதாரக் கேடான வாழ்க்கை முறையாலும் தொத்துக்கள் ஏற்படுவதும் இவ்வியாதிகள் பரவுவதற்கான காரணங்களாகும். சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் சுகாதார பிரச்சினைகள் சரிவர கவனிக்கப்படாவிட்டால், அங்குள்ள மக்கள் பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் உண்மையான முன்னேற்றம் காண முடியாது.

சமுதாய அபிவிருத்தித் திட்டத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் பிரதான சுகாதார நிலையம் ஒன்று இருக்கும்; சுமார் 100 கிராமங்களில் உள்ள சுமார் 66,000 மக்களுக்கு அது சேவை செய்யும்; அந்நிலையத்தில் ஒரு மருத்துவச் சாலையும், 6 படுக்கைகள் உள்ள 'வார்ட்' ஒன்றும் இருக்கும்; நோய்களைக் கண்டறிவதற்கான சில சாதன வசதிகளும் இருக்கும்; இந்த நிலையத்தைச் சேர்ந்தாற்போல் தாய்-சேய் நல நிறுவனம் ஒன்றுமிருக்கும்; அங்கே கர்ப்பம் தரித்த மகளிர், பிள்ளைப் பேறுக்கு முன்னும் பின்னும் உதவி பெறுவார்கள்.

# செய்திச் சுருள்

★

### திருச்சி மாவட்ட சுரங்கத் தொழிலாளர் சங்கம்

திருச்சி மாவட்ட சுரங்கத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய சங்கப் பிரதிநிதிகள் கூட்டம், அரியலூரில் 23—9—55 பிற்பகல் 2 மணிக்கு தோழர் கே. சி. மருதமுத்து தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தலைவராகத் தோழர் ஆர். ராமசாமியும், துணைத் தலைவராகத் தோழர் என். அருச்சுனனும், செயலாளராகத் தோழர் டி. சி. எஸ். மணியும், துணைச் செயலாளராகத் தோழர் ஆர். நாராயணசாமியும் பொருளாளராகத் தோழர் ஏ. சாமிநாதனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் அடுத்த ஆண்டிற்கான மத்தியக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், தோழர் என். அருச்சுனன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் நடேசன் நாராயணசாமி, சின்னையா, சுப்பு காதர்பாஷா, ரெங்கசாமி, ஏ. கிருஷ்ணன், ஆர். ராமசாமி, எம். அப்பாதுரை, டி. சி. எஸ். மணி, ந. வடிவேல், செவப்பெருமாள், சின்னையா ஆகியோர் சுரங்கச் சட்டத்தை அமுல் நடத்தக் கோரி சொற்பொழிவாற்றினர்.

### ஊ. பு. அ. சவுந்திர பாண்டியனுர் நினைவுப் படிப்பகம்

அருப்புக்கோட்டை, செப். 29—
23—9—55 இரவு 11 மணியளவில், படிப்பக மனையில், தோழர் வே. பெ. இரத்தினம் தலைமையில் படிப்பகத்தின் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. தோழர் மீ. ஏனுதிநாதன் தலைவராகவும், தோழர் ப. பெ. ந. நல்லதம்பியைச் செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### திருப்புத்தூர் அழகிரி நினைவு படிப்பக அமைப்பு

25—9—55-ல், திருப்புத்தூர் பெரிய கடை வீதியிலுள்ள தோழர் சுப்பையா இல்லத்தில், அழகிரி நினைவுப் படிப்பக அமைப்புக் குழுக் கூட்டம், தோழர் மரி. செபத்தி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் மு. சங்கிலிமுத்துவைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின்னர், கருணாநிதி படிப்பகத் திறப்பு விழாவிற்கு வருகை தரும் அண்ணா அவர்களால், மேற்படி படிப்பகத்தையும் திறந்துவைப்பதென்றும், அதுபோது தி. மு. கழக மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### கலா நாடக மன்றம் சீராமபுரம்—பெங்களூர்

25—9—55-ல், தோழர் பி. ஆர். நாகராசன் தலைமையில் நடைபெற்ற மன்ற நடிகர் கூட்டத்தில், தோழர் ப செல்வராசன், மன்றத்தின் தொண்டு குறித்தும், நல்ல தமிழ், கன்னட நூல்களடங்கிய நூல் நிலையம் ஒன்றை நிறுவ வேண்டிய அவசியம் குறித்தும் பேசினர்.

'பிணக்காடு' நாடகத்தின் நிகர இலாபத்தைக் கொண்டு நூல் நிலையத்துக்குப் புத்தகங்கள் வாங்குவதெனவும், மன்றத்தின் ஆண்டு விழாவை வரும் நவம்பரில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதோடு, நாடகக் கலையை நல்ல முறையில் பயிற்றுவித்த ஆசிரியர் தோழர் ர. வி. குர்ஜாலி அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

### முத்தமிழ்க் கலை மன்றம்

23—9—55ல், ஆத்தூர் மாரிமுடி திருத்தகத்தில், முல்லைவாடி தி. மு. கழகச் சார்பில், நடைபெற்ற கூட்டமொன்றில், 'முத்தமிழ்க் கலை மன்றம்' என்ற பெயரில் கலை மன்றம் ஒன்று நிறுவப்பட்டு, தோழர் அ. ம. அங்கமுத்துவைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. 'பாண்டியன் பரிசு' என்ற நாடகத்தை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### கடம்பூர் ஊராட்சி மன்ற துணைத் தேர்தல்

கடம்பூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தோழர்கள் சு. தர்மராஜு, கே. கிருஷ்ணசாமி ஆகியோர் தங்கள் பதவியிலிருந்து விலகிக் கொண்டமையால், அந்த காலி இடத்திற்கு 23—9—55 பகல் 10-30 மணியளவில், க. அ. ரா. ம. ஜார்ஜ் உயர்தர ஆரம்பப் பள்ளியில், திரு. எஸ். பொன்னுசாமி முன்னிலையில் நடைபெற்ற துணைத் தேர்தலில், தி. மு. கழகத் தோழர் வே. மு. மாரியப்பா, சி. ராஜகோபால் ஆகியவர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந. நி.)

### 'மாநிலம்' — பத்திரிகை

வாணியம்பாடி, செப். 24—
வட ஆற்காடு மாவட்ட அடிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் வி. என். தத்தப்பன், 'மாநிலம்' என்ற தமிழ் பத்திரிகையின் ஆசிரியராகப் பதிவு செய்துகொண்டார். அப்பத்திரிகையை அச்சடிப்பவராக தோழர் எம். ஏ. அமீத் சாயபு பதிவு செய்துகொண்டார்.

### திருமணங்கள்

28—8—55ல், திருப்பரங்குன்றம் 'தெலுங்குச் செட்டியார் திருமணக் கூடத்'தில், தோழர் பெ. இராவணத்தாசன்—தோழியர் சரோசா திருமணம், தோழர் ஆ. ப. இரா. சந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்குப் பல நண்பர்களாலும், உறவினர்களாலும் வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் கொடுக்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

• • •

14—9—55ல், அம்மையப்பனில் தோழர் விஜயராகவன் தலைமையில், தோழர் நாராயணசாமி—தோழியர் சரசுவதி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் ஐம்பு, அன்புரையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

### அன்பளிப்பு

தஞ்சை மாவட்டம் உள்ளிக்கோட்டை தி. மு. கழகச் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2—3—0 அன்பளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

### நன்றியறிவிப்பு

18—9—55ல், சென்னை பெரம்பூரில் நடைபெற்ற தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, நாட்டுப் பிரிவினை விழாவிற்குப் பலவகையாலும் ஒத்துழைத்த மன்றங்கட்கும், நண்பர்கட்கும், சென்னை மாவட்டக் கழகத்தினருக்கும், சென்னை 6-வது வட்டக்கழகச் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

### பிறப்பு

18—9—55 ல், டோனூர் மருத்துவ மனையில் தோழர் அலி சேக்மன்சூர் அவர்களின் மனைவியார் ஓர் ஆண் மகவைப் பெற்றார். தாயும் சேயும் நலம்.

• • •

செங்கை தி. மு. கழகத் தோழர் க. கல்லையா அவர்களது துணைவியார், 22—9—55-ல் பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

### மறைவு—அனுதாபம்

சென்னை மாணவர் மன்றத்தின் முன்னாள் துணைத் தலைவரும், பேராசிரியர் மணி திருநாவுக்கரசு அவர்களின் மாணவர்களுள் ஒருவரும், பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் உடன்பிறப்பாளரும், சென்னை அப்பர் அச்சக நிலையத் தலைவருமான முடிச்சூர் இராமச்சந்திரன் அவர்கள் சில நாட்கள் நோயினால் துன்புற்றிருந்து 19—9—55-ல், தமது 55-வது வயதில் இயற்கையெய்தினர். அவர்தம் உடல் சென்னை சூளை மயானத்தில் எரியூட்டப் பெற்றது. மாணவர் மன்றச் சார்பில் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் உருக்கமானதோர் இரங்கற் சொற்பொழிவாற்றினர்.

தமையனை இழந்து வாடும் பேராசிரியருக்கும், அவர்தம் உறவினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். —ஆ-ர்.

• • •

சமயநல்லூர் தி. மு. கிளைக் கழக முன்னாள் செயலாளர் பெ. கந்தசாமி அண்மையில் இயற்கையெய்தியமை குறித்துக் கிளைக் கழகச் சார்பில், அன்னாரை இழந்துவாடும் அவரது உற்றார் உறவினர் அனைவருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1954 டிசம்பர் மாதத்திலிருந்து 1955 மே மாதம் வரையுள்ள காலத்தில், இந்தியா முழுவதிலும், மொத்தம் 46,58,909 பேருக்கு பி. சி. ஜி. மருந்து குத்தப்பட்டது.

# அகாலிகள் பொறுப்பற்ற போக்கினராம்!

## பிரதமர் நேருவின் வசைமாரி!

மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு பற்றி கருத்து

புதுடில்லி, செப். 28—

"'பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைக்காவிட்டால், வரிகொடா இயக்கம் நடத்துவோம்'—என்று அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் அச்சுறுத்தியிருப்பது தெரியுமா? 'அதனைத் தொடர்ந்து ஏதேனும் பலாத்கார நிகழ்ச்சிகள் ஏற்பட்டால், நான் அதற்குப் பொறுப்பாளி ஆகமாட்டேன்,' என்று அவர் கூறியிருப்பதும் தங்களுக்குத் தெரியுமா?" என்று பண்டித நேருவிடம் கேட்கப்பட்டபோது, அவர், 'அகாலிகள் எப்பொழுதும் பொறுப்பற்ற போக்கினர் என்பது நமக்குத் தெரிந்ததுதானே?' என்று பதிலளித்திருக்கிறார்.

"எவ்வளவு சீக்கிரம் மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்பட முடியும்?" என்று பண்டிதரைக் கேட்டபோது, அவர், "சிபாரிசுகள் என்ன என்பது எனக்குத் தெரியாது; ஆனால், சிபாரிசுகள் அமுல் செய்யப்படுமுன் அவற்றைச் சட்டமாக்க வேண்டியது அவசியம்; சிபாரிசுகள், மாநில சட்ட சபைகளின் ஒப்புதலுக்கும் அரசியல் சட்ட மாற்றங்களுக்கும் உள்ளாக நேரிடலாம்; எனவே, எவ்வளவு சீக்கிரம் நாம் முடிவெடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிவெடுத்து, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமுல் செய்வோம்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"சிபாரிசுகளை அமுல் செய்வதற்காகப் பொதுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுமா?" என்று கேட்கப்பட்டபோது, "பொதுத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பது நமது விருப்பமல்ல," என்று பண்டிதர் பதில் தந்திருக்கிறார்.

"பொதுத் தேர்தல்களுக்குள்ளாகவே சிபாரிசுகள் அமுலாகுமா?" என்றபோது, "நிச்சயம், முடிந்தவரை அமுல் செய்யப்படும்," என்று, பதில் தந்திருக்கிறார்.

மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், பண்டித நேரு, மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் கொண்ட அறிக்கை இன்னும் இரண்டொரு நாட்களில் தாக்கலாகிவிடக்கூடும் என்றும், அறிக்கையைப் பார்க்கும் முன்பு அவை உடனடியாக வெளியிடப்படுமா என்பது குறித்துச் சொல்வதற்கில்லை என்றும், சீக்கிரமே அதனை வெளியிடுவதற்குச் சர்க்கார் விரும்புகிறது என்றும், மாநில அரசாங்கங்களும் இது பற்றி பொறுப்பு உடையவை என்பதால், அவை அறிக்கையைப் பார்க்கு முன்பாக அதனை வெளியிடுவது உசிதமல்ல என்றும், வெளியிடுவதில் பெரும் தாமதம் கூடாது என்பது மட்டும்தான் சர்க்காரின் நோக்கம் என்றும் பதிலளித்திருக்கிறார்.

"சிபாரிசுகள் முழுவதையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா?" என்று கேட்கப்பட்டபோது, அவற்றைப் பார்க்கும் முன்பு எதுவும் கூறமுடியாது என்றும், இப்போதே ஏதேனும் கூறி தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை என்றும், மக்கள் சபைதான் இறுதியாக, சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வதில் முடிவு கூறும் அதிகாரம் உடையது என்றும் பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

'ஒரு உயர் அதிகாரம் பெற்ற குழுவின் சிபாரிசுகள் ஒருமனதானவையாயிருக்குமானால், பொதுவாக அவற்றை ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பொருள்படுகிறது; அவற்றை நிராகரிப்பது என்பது கடினமானதுதான்; ஆனால், அதற்காக சர்க்காரோ, மக்கள் சபையோ அந்தக் குழுவின் சிபாரிசுகளைக் கைகட்டி, வாய் பொத்தி அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல" என்றும், பண்டிதர் தெரிவித்திருக்கிறார்.

## கழகக் கூட்டங்கள்

★

பெருந்துறை

ஸ்டோர் மைதானத்தில்

1—10—55 மாலை 7 மணிக்கு

தலைவர்: ப. கு. சுப்பிரமணியம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

கோவை செழியன்

★

பிரிவினை முழக்கம்

காங்கேயநெல்லூர்

1—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

டி. ஆர். பாலகிருஷ்ணன்

பேசுவோர்:

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

பசூல்

வே. சு. இளஞ்செழியன்

கருத்தோவியன்

## நிலைமைக்கு ஏற்றவாறு திருத்தப்படுமாம்!

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி நேரு

புதுடில்லி, செப். 28—

"அவசியத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு மாற்றியமைக்கும் முறையிலேயே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமைந்திருக்கும்; ஒவ்வொரு ஆண்டிலும் இந்தத் திட்டம் மறு பரிசீலனை செய்யப்படும்; மேலும் ஆண்டுதோறும் விரிவான திட்டங்களும் தயாரிக்கப்படும்; இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெளியிடப்படும்,"

என்று, பத்திரிகை நிருபர்களிடம், பண்டித நேரு குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"நாட்டிற்குத் தற்பொழுது தேவையாக உள்ளவைகளை மட்டும் நாம் கவனித்துக்கொண்டிருந்தால் போதாது; வளர்ந்துகொண்டிருக்கும் தேவைகளையும் நாம் கவனித்துக் கொள்ளவேண்டும்;

"நம்முடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது; இன்றைக்கு 15 செஜம் துணியை உபயோகிப்பதற்குப் பதில், 18 செஜம் துணியை உபயோகிக்க ஆரம்பித்தால், அதன் மூலம் பிரமாதமான மாறுதல்கள் நாட்டில் ஏற்பட்டுத்தான் தீரும்;

இந்தத் திட்டத்தின்படி 110 இலட்சம் பேருக்கு வேலையில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்; இந்த வேலைகளில் பெரும்பாலானவை கிராமக் கைத்தொழில்களாகவே இருக்கும்."

## துர்காபூருக்கு மற்றொரு திட்டம்

இந்தியாவில், தற்போது மொத்தம் ஒன்பது 'கோக்' உலை சாதனங்கள் உள்ளன. மேற்கு வங்காள சர்க்கார் சுமார் ரூ 5·25 கோடி செலவில், மற்றொரு கோக் உலை சாதனத்தை துர்காப்பூரில் ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கின்றனர்.

## ஐ. சி. எஸ். அய்யர் வழக்கு எதிரொலி

புதுடில்லி, செப். 28—

எஸ். ஏ. வெங்கடராமன் ஐ. சி. எஸ். வழக்கு சம்பந்தமான சில விவரங்களை சுப்ரீம் கோர்ட்டின் கவனத்திற்கும், அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுவர முயற்சித்ததற்காக, தன்னுடைய இலாகாவில் உள்ள சில அதிகாரிகள் தன் மீது பழிவாங்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக பம்பாய் ஏற்றுமதி, இறக்குமதி பிரதம கன்ட்ரோலர் காரியாலயத்தில் உள்ள கே. எஸ். நாயர் என்பவர் இந்தியப் பிரதம நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

அவருடைய இச்செய்கை கோர்ட்டை அவமதித்ததாகக் கருதப்பட்டு, அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது; ஆனால் கோர்ட்டில் அவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்; அவரது மன்னிப்பை சுப்ரீம் கோர்ட்டு ஏற்றுக்கொண்டு, 'இனிமேல் இப்படிச் செய்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படும்,' என எச்சரித்தது.

## சென்னையில் கண்ணாடி சாமான்கள் உற்பத்தி

சென்னை, செப் 28—

மதுரை, காசர்கோடு ஆகிய இடங்களில் உள்ள கண்ணாடி உற்பத்திப் பயிற்சி நிலையங்களில், தெர்மாஸ் பிளாஸ்க், மற்றும் பல கண்ணாடிச் சாமான்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று சென்னை சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு, அமுல் செய்யப்படுகிறதாம்.

உற்பத்தியாகும்பொருள்களுக்கு 'மார்க்கெட்' கிடைக்கவும் சர்க்கார் ஏற்பாடு செய்யும் என்று தெரிகிறது.

கல்வி, மற்றும் ஆராய்ச்சிக் கூடங்களுக்குத் தேவையான கண்ணாடிப் பண்டங்கள் போன்ற எல்லா கலை நுணுக்கமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு சென்னை கண்ணாடி நிலையத்தில் பயிற்சி தரப்படுகிறது.

இந்த பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகளை விரிவாக்குகிற திட்டத்தினையும் சர்க்கார் பரிசீலித்து வருகின்றனராம்.

## 'சர்க்கார் அரசியல் சட்டத்தை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திலத்திற்குப் பதிலாக வட்டார மொழிகளே அந்த இடத்தைப் பெறவேண்டும்; ஆனால், பல்கலைக் கழகங்கள் ஆங்கிலப் படிப்பை ஆதரிக்க வேண்டும்; ஏனெனில், அப்போதுதான் நாம் உலகத்தின் இதர நாடுகளுடன் தொடர்பு கொள்ள முடியும்."

டாக்டர் இலட்சுமணசாமி (முதலியார்) பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உண்மை நிலைகளின் உணர்வோடு நாம் இந்த மொழிச் சிக்கலைத் தீர்க்க அணுகவேண்டும்;

'அறிவு பெறவும், அனுபவம் பெறவும், பயனுள்ள குடி மக்களாக விளங்கவும், எது சிறந்த வழி என்பதைக் காணுவதே மிக முக்கியமான—அவசியமான ஒன்றாகும்; எந்த ஒரு மொழியையும்—இந்தியைக்கூடத்தான்—ஒருதுணை மொழியாகப் பயில்வதை நான் எதிர்க்கவில்லை; சென்னை பல்கலைக் கழகம், இந்தியை ஒரு இரண்டாம் மொழியாக கற்பிப்பதை ஆதரித்திருக்கிறது;

"ஆனால், ஒவ்வொருவரும் வட்டார மொழிகளை மறந்துவிட்டு, துவக்கப் பள்ளியிலிருந்தே இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்படும்போதுதான் நாம் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்;

"இந்தி மொழி, இந்தியாவில் உள்ள எல்லோரையும் ஒன்றுபடுத்துவதற்காகத்தான் புகுத்தப்படுகிறது என்பதை மக்கள் உணரும் வகையில், படிப்படியாகக் கற்றுத் தரப்பட வேண்டும்;

"அரசியல் சட்டத்தில், இந்தியும், ஆங்கிலமும், அலுவல் மொழிகளாக 15 ஆண்டுகளுக்கு இருக்கும்என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் அஞ்சல் அட்டைகளும், பணம் அனுப்பும் நமூனுக்களும், ஆங்கிலமின்றி வெறும் இந்தி மொழியில் மட்டும் வெளியிடப்படுகின்றன; அரசியல் சட்ட விதிகளை (இந்திய சர்க்கார்) எத்தனை தூரம் பின்பற்றுகின்றனர் என்பது எனக்குத் தெரியவில்லை;

"சிலர், 'ஆங்கிலம் எல்லாப் பள்ளி நிலைகளிலும் புகுத்தப்பட்டபோது நாம் கற்றுக்கொள்ளவில்லையா? இந்தியை மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கவேண்டும்?' என்று கேட்கின்றனர்.

"ஆங்கிலம் புகுத்தப்பட்ட காலத்தில், நாட்டில் கல்வி அறிவு பெற்றோர் தொகை 10 முதல் 11 சதவிகிதம் மட்டுமே; ஆனால், இப்போது அரசியல் சட்டத்தில், 14 வயதுக்குட்பட்ட எல்லோருக்கும் கட்டாயக் கல்வி தரவேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது; இதனைச் செய்வதற்கு வட்டார மொழிகளால்தான் முடியும்;

"பள்ளிகளிலும், இதர கல்வி நிலையங்களிலும் இந்தி உபயோகிக்கப்படமுடியும் என்று சிலர் பேசுகின்றனர்; இந்தி போதிப்பதற்குப் போதுமான ஆசிரியர்கள் எங்கே இருக்கின்றனர்? இந்தியா முழுமையிலும் சுற்றியிருக்கிறேன்; இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள கல்லூரிகளில் பெரும்பாலான பேராசிரியர்கள் தென்னாட்டவர்தான்; இந்த நிலை இருக்கும்போது, இந்தி எப்படிப் பள்ளிகளில் கற்பிக்கப்பட முடியும்?

"இந்தியை அலுவல் மொழியாக அவர்கள் உபயோகித்துக் கொள்ளட்டும்; ஆனால் எல்லாரும் இந்தியை பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது, உண்மைகளை மறைக்கும் செயலாகும்;

"அரசியல் சட்டத்தை சிலர் சுட்டிக் காட்டி, '15 ஆண்டுகளில் இந்தியைப் புகுத்த வேண்டும்' என்றிருப்பதாகக் கூறுகின்றனர்; இந்த அரசியல் சட்டத்தை வேறு பல காரியங்களுக்காக ஏற்கனவே ஐந்து முறை திருத்தி அமைத்திருக்கிறார்களே! அப்படி இருக்கும்போது, இந்தி மொழி அலுவல் மொழியாகும் காலத்தை அதிகரிப்பதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்குத் தடையாயுள்ளது எது?

"இந்தியை எதிர்க்க வேண்டும் என்பதற்காக அல்ல, அதனை நாம் எதிர்ப்பது; பொறுப்புணர்வோடு இந்தியை ஏற்றுக்கொள்வதில் உள்ள கஷ்டங்களை எடுத்துரைக்க வேண்டிய கடமை யுடையவர்களாயிருக்கிறோம்; ஏனெனில், இந்தியாவின் வேறு பகுதிகளில் வாழ்பவர்களைக் காட்டிலும் நமக்குத்தான் அந்தக் கஷ்டங்களைக் குறித்து அதிகமாக உணர முடியும்."

முகம்மது உஸ்மான் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழர்களின் கருத்தையும், உணர்வையும் சர்க்கார் பிரதிபலிக்காமல்போனால், அவர்கள் பெரியதொரு தவறு செய்தவர்களாவர்; தமிழர்களுடையவும், சர்க்காருடையவும் தேசிய மொழியாக, இந்தி ஒரு போதும் வர முடியாது,"

## ஆந்திராவின் கனிச் செல்வம்

மோனேசைட் கிடைக்கிறது

கர்னூல், செப் 27—

விசாகப்பட்டினம் மாவட்டத்தில் பீமலி பட்டிணம் வால்டேர் அருகே கடலோரங்களில் 'மோனேசைட்' கலந்த கருப்பு மணல் ஏராளமாகக் கிடைப்பதாக தென் வட்டார பூகர்ப்ப இலாகா அதிகாரி தெரிவித்திருப்பதாகவும், ஆனால், இன்னும் இந்திய பூகர்ப்ப இலாகா அதிகாரிகள் முழுவதுமாகப் பரிசோதனை நடத்தவில்லை என்றும், ஆந்திர திட்ட இலாகா மந்திரி காளா வெங்கட்ராவ் தெரிவித்திருக்கிறார்.

முறையான ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், தாதுப் பொருள்களைத் தோண்டி எடுக்கும் திட்டம் எதுவும் ஆந்திர மாநில சர்க்காரிடமில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அணுசக்தி தயாரிப்பதற்கு இந்தத் தாதுப் பொருள் பயன்படுகிறது.

## அண்ணாமலை பல்கலைக் கழக வெள்ளி விழா

புதிய தமிழ் ஆராய்ச்சிக்கூடம் அமையும்

அண்ணாமலை நகர், செப். 27—

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி, இந்திய சர்க்கார் வழங்கும் ரூ. 3 லட்சம் மானியத்தைக் கொண்டு பல்கலைக் கழகத்தில் தமிழுக்கான புதிய ஆராய்ச்சிக் கூடம் ஒன்று துவங்கப்படும் என்று தெரியவருகிறது.

தமிழ்ச் சொல் இலக்கண அகராதி ஒன்று தயாரிப்பதுடன், திராவிட எழுத்து இலக்கண, ஆராய்ச்சியும் புதிய ஆராய்ச்சிக் கூடத்தில் நடத்தப்படும் என்றும் தெரிகிறது.

## சேலம் மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள்

31—8—55-ந் தேதி முடிய உள்ள மூன்று மாத காலங்களில், சேலம் மாவட்டத்தில் 5,100 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

சென்ற ஆண்டில் இதே காலத்தில், 5,730 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

68,100 காலன் ஊறலும், 343 காலன் கள்ளத்தனமாகக் காய்ச்சிய சாராயமும், போலீசாரின் சோதனையில் பிடிபட்டதாம்.

## பாம்பு முட்டைக்கு 7 பேர் பலியாயினர்!

மிர்சாபூரிலுள்ள பாப்ரேஸ் கிராமத்தில், பண்ணையொன்றில் பணியாற்றிவந்த 6 நபர்கள், தங்களுடைய அலுவல் முடிந்ததும், 'மாம்பழ வற்றல்' உட்கொண்டதை அடுத்து உடனே அவர்கள் இறந்துவிட்டனராம்.

இந்த அதிசயத்தை அறிவதற்கு எண்ணங்கொண்ட அந்தப் பண்ணையின் சொந்தக்காரர், 'மாம்பழ வற்றலை' தானே உட்கொண்டு பார்த்தபோது, உடனே அவரும் இறந்துவிட்டாராம்.

'மாம்பழ வற்றல்' இருந்த பெட்டியில், பாம்பொன்று முட்டையிட்டிருந்ததே அதற்குக் காரணமென்றும், அந்தப் பெட்டியில், பாம்பு சிறிது நாட்கள் வசித்திருக்கக்கூடுமென்றும் கருதப்படுகிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.